# திறன்பேசியின் நன்மைகளும் தீமைகளும்

## வாதக் கட்டுரை

தொலைபேசி கண்டு பிடிக்கப்பட்டு ________________________ மேல் ஆகிவிட்டது. 1867இல் அலெக்சாண்டர் கிரகாம்பெல் என்பரால் தொலைபேசி கண்டு பிடிக்கப்பட்டது. ஆரம்பத்தில் தொலைபேசி தொலைவில் உள்ளவர்களிடம் பேசுவதற்கு மட்டுமே ___________________________________ என்றாலும் காலப்போக்கில் கம்பியில்லாத் தொலைபேசிகள் அறிமுகமாயின. இன்று கைபேசிகள் என்றழைக்கப்படும் அத்தொலைபேசிகளின் மற்றொரு பரிமாணமாக திறன்பேசிகள் வந்துவிட்டன. இன்று குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரது கைகளிலும் இத்திறன்பேசி தவழ்ந்துக் கொண்டிருப்பது ________________________________ ஆகும்.

திறன்பேசிகளில் உள்ள பல தொழில்நுட்ப அமைப்புகள் நம்முடைய அன்றாட வேலைகளையும் அலுவலக வேலைகளையும் _________________________ என்றால் அது மிகையாகாது. ஒரு காரியதரிசி செய்யக்கூடிய கிட்டத்தட்ட அனைத்து வேலைகளையும் இன்றைய நவீன திறன்பேசியினால் செய்துவிட முடிகிறது. செய்யவேண்டிய காரியங்களை நினைவூட்டுதல், _____________________ மற்றும் குறுஞ்செய்திகளை அனுப்புதல் ; படித்தல், முக்கியமான தகவல்களை உடனுக்குடன் பரிமாறிக்கொள்ளுதல், காணொளிகளைப் பார்த்தல், இசையைக் கேட்டல் மற்றும் விளையாட்டுகளை விளையாடுதல் என பல திறன்கள் அதனுள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், அதேசமயம் இத்திறன்பேசிகளைத் தொடர்ந்து பயன்படுத்துவது ஆபத்தானது என ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர். திறன்பேசிகளிலிருந்து வெளிப்படும் _____________________ மனிதனின் பல்வேறு உறுப்புகளைப் பாதிப்படையச் செய்கிறது. மேலும், அதிகமாக திறன்பேசியைப் பயன்படுத்துவதால் மூளையின் செயல்பாடு குறைகிறது. கண் பார்வையும் பாதிப்படைகிறது. அதீத நேரம் திறன்பேசியில் செலவிடுபவர்கள் ______________________________ உறங்குவதற்கு சிக்கலையும் எதிர்நோக்குகின்றனர்.

எந்தவொரு கண்டுபிடிப்பிலும் நன்மைகளும் உண்டு ; தீமைகளும் உண்டு. அதை நாம் பயன்படுத்தும் ____________________________ அந்த நன்மையும் தீமையும் அடங்கியுள்ளது என்பதை மறுக்க இயலாது. வீவேகமாக இத்திறன்பேசிகளைப் பயன்படுத்துவதன் மூலமும் குழந்தைகள் அதிகம் இதனைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதாலும் நன்மையே விளையும்.

| | | | |
|---|---|---|---|
| உபயோகப்படுத்தப்பட்டது | மின்னஞ்சல் | எளிதாக்குகின்றன | கதிர் வீச்சுகள் |
| உறக்கமின்மையையும் | விதத்திலேயே | நூறாண்டுகளுக்கு | வெள்ளிடைமலை |

LIVEWORKSHEETS